**தனமல்வில பிரதேச சபை - 2022**

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தனமல்வில பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தனமல்வில பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது சபையால் இருப்பு பெறுமதியிடல் வருமான இனங்காணல் மற்றும் நடைமுறை வேலைகளை கணக்கீடு செய்வதற்குரிய கணக்கீட்டு கொள்கை வெளிப்படுத்தபட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது குறித்த கணக்கீட்டு கொள்கையை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது பின்பற்றப்படுகின்ற கணக்கிட்டு கொள்கைகள் வெளிப்படுத்த வேண்டும் |

#### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை- | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போதும் முன்மைனய ஆண்டுகளின் போதும்’ பிரதேச சபைக்குரிய கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் 20 கட்டிடங்களை மேம்படுத்தும் செலவினம் ரூபா 32,837,050 தொகை நிதி நிலைமைக் கூற்றில் காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது குறித்த பெறுமதியை காணி மற்றும் கட்டிடங்களின் கீழ்பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | பிரதேச சபை பயன்படுத்தும் அனைத்து ஆதனங்கள் பொறிகள் உபகரணங்களின் பெறுமதி கணக்கீடு செய்யபப்பட வேண்டும் |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான வாகனங்கள் காப்புறுதி | எதிர்காலத்திற்கான கொடுப்பனவுகள் இரண்டு | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் வருமான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்காக 2023 ஆம் ஆண்டுக்காக செய்யப்பட்ட முற்கொடுப்பனவு ரூபா 98,724 ஆக இருந்த போதும் அது நிதிநிலைமை கூற்றில் ரூபா 197,447 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. | முறை பதிவு செய்யப்பட்டமை 2023 ஆம் ஆண்டின் போது சீராக்கு வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனங்கள் பொறிகள் உபகரணங்கள் கணக்கின் மீதி ரூபா 1,780,982,520 ஆக இருந்த போதும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் பங்களிப்பு கணக்கில் மீதி ரூபா ஒன்று 1,780,561,514 ஆக இருந்தது. | 2023 ஆம் ஆண்டில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகிறேன் | சரியான பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும் |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு செயற்திட்டத்தின் கீழ் சபையால் கையேற்கப்பட்டிருந்த ரூபா 1,346,795 ஆன சொத்துக்கள் நிதிநிலைமை தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது சரியான பெறுமதியை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகிறேன் | சரியான மீதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (உ) | 2022 திசெம்பர் 31 உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதிநிலைமை தொடர்பான கூற்றில் நடைமுறை பொறுப்புகளில் நானாவித வைப்புக்கள் ஆகஸ்ட் 18,656,693 குறிப்பிடப்பட்டிருந்த போதும் நானாவித வைப்பு பதிவேட்டின் பிரகாரம் முளாய்வாண்டின் திசெம்பர் 31 உள்ளவாறு தீர்க்கப்பட வேண்டிய நீதி ரூபா 11,592,732 ஆக இருந்தது | மேலும் வைப்பு பதிவேட்டினை பரீட்சித்து இத்தவறினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் | சரியான கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் |
| (எ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப் பட்டிருந்த ரூபா 16,000,000 கூட்டுத் தொகையான ஆதனங்கள் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் இதில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை.∴. | இச் சொத்துக்களின் பெறுமதி 2023 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகிறேன். | பிரதேச சபையால் பயன்படுத்தும் அனைத்து ஆதனங்கள் பொறிகள் உபகரணங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

### 1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 10 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட மீதிகள் மற்றும் அதற்காக வழங்கப்பட்டிருந்த அட்டவணைகள் மற்றும் ஆவணங்களின் பிரகாரம் காண்பிக்கப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 14,909,777 ஆன வேறுபாடு ஒன்று காணப்பட்டது. | குறித்த அட்டவணைகள் மற்றும் ஆவணங்களைப் மேலும் பரீட்சித்து இத்தவறினை விரைவில் சீராக்குவதாக அறியத் தருகிறேன் | அட்டவணைகள் மற்றும் ஆவணங்களை நாளதுவரையாக்கி இணக்கமின்மை களுக்கு காரணங்களை கண்டு சரி செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் 06 கணக்கு விடயங்களுக்கு உரிய பதிவேட்டில் பிரகாரம் காணப்பட்ட பெறுமதி நிதி நிலைமை கூற்று அல்லது நிதி செயலாற்றல் கூற்றுடன் ஒப்பீடு செய்யும் போது ரொம்ப 43,502,452 ஆன வேறுபாடுகள் காணப்பட்டது | 2023 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 1,771,061,030 கூட்டுப்பெறுமதியான 05 சொத்து விடயங்கள் மற்றும் 03 பொறுப்பு விடயங்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள், தொழில்சார் மதிப்பாளரின் அறிக்கைகள் சகல சொத்துக்களுடன் கூடிய உப பதிவேடுகள் மற்றும் நாளது வரையாக்கப்பட்ட குத்தகை பதிவேடு சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் சபை நிதி நிலைமை அடிப்படையில் நடவடிக்கை எடுத்து தொழில்சார் மதிப்பீட்டாளர்கள் கொண்டு மேற்கொள்வதாகவும் நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் உரிய ஆவணங்கள் நாளதுவரையாக்கு வதாகவும் அறியத் தருகிறேன் | நிதிகூற்றுக்களில் உள்ள மீதிகளை உறுதிப்படுத்தப்பட்டு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணக் கோவையின் 571 | 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 3,000,595 ஆன போது வைப்பு மீதிகள் விடுவிக்கப்பட்டு இருக்கவில்லை. | 02 ஆண்டுகளை மிகைத்த வைப்பு மீதிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றேன். | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | 2015 மார்ச் 10 ஆம் திகதிய 3/2014(1) ஆம் இலக்க | தனமல்வில பிரதேச சபையில் சேவை புரிந்து பதில் கடமைபுரியும் சபை | இந்த உத்தியோகத்தர் ஓய்வு பெற்றுச் சென்று உள்ளதுடன் கூடுதலாக | கூடுதலான கொடுப்பனவு அறவிடப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | திறைசேரி செயலாளரின் அரச நிதிச் சுற்றறிக்கை | செயலாளருக்கு சுற்றறிக்கைக்கு இணங்காத வகையில் 2015 திசெம்பர் முதல் 2019 ஒக்டோபர் வரை மாதம் ஒன்றுக்கு ரூபா 4000 வீதம் ரூபா 94 000 தொலைபேசி படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது | கொடுப்பனவு செய்யப்பட்ட தொலைபேசிப் படிகளை அறவிடுமாறு ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது | வேண்டும் |
| (இ) | 2010 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கை | சபையினால் பராமரிக்கப்படும் வீதி விளக்குகளின் எண்ணிக்கை அவை பொருத்தப்பட்டுள்ள இடங்கள் போன்றவற்றை இனங் காணக்கூடிய வகையில் வீதி விளக்குகளை பற்றிய கணிப்பீடு மேற்கொள்ளப்படவிருந்த துடன் வீதிவிளக்கு வெளிச்சமூட்டுதல் தொடர்பாக இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட இருக்கவில்லை | வீதி விளக்குகளை பற்றிய கிராம சேவையாளர் மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா கவும் மின்சார சபையுடன் உடன்படிக்கை செய்வதற்காக குறித்த நிறுவனங்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கணிப்பீடு அறிய தருகின்றேன். | வீதி விளக்குகள் பதிவேடுகளை நாளதுவரை யாக்கப்பட வேண்டியதுடன் சுற்றறிக்கையின் பிரகாரம் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படவே ண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,360,922 ஆக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 24,094,688 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2022 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2021 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரியும் வரியும் | 50,000 | 162,500 | 162,500 | - | 50,000 | - | - | - |
| (ii) வாடகை | 13,190,170 | 8,102,426 | 6,586,576 | 1,515,850 | 15,795,500 | 12,039,132 | 5,649,939 | 6,389,193 |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,235,465 | 1,390,595 | 1,390,595 | - | 2,048,530 | 1,460,602 | 1,460,602 | - |
| (iv) ஏனைய வருமானம் | 58,270,788 | 2,274,129 | 2,231,479 | 42,650 | 58,854,279 | 9,952,425 | 8,425,875 | 1,526,550 |
| | 72,746,423 | 11,929,650 | 10,371,150 | 1,558,500 | 76,748,309 | 23,452,159 | 15,536,416 | 7,915,743 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 11,929,650 ஆன மொத்த வருமானத்தில் ஆண்டின் இறுதிவரை ரூபா 1,558,500 அறவிடப்படாததுடன் அது மொத்த பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 13 சதவீதம் ஆகும. | எதிர்காலத்தில் நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறியத் தருகிறேன். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 03 வாரச்சந்தைகளை குத்தகைக்கு வழங்குவதற்காக பெறவேண்டிய ரூபா 4,561,500 ஆன கேள்வி ஆதனங்கள் குத்தகை வருமானத்திலிருந்து 2022 திசம்பர் 31 உள்ளவாறு ரூபா 813,760 அறவிடப்பட வேண்டியிருந்தது | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | நிலுவை குத்தகை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் ' போது குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 107 கடைகளிலிருந்து ரூபா 1,735,900 ஆனா கடை கூலிகள் வருமானத்திலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 366,295 அறவிடப்பட்டிருக்கவில்லை அது மொத்த பட்டியலிட்ட வருமானத்தில் 21 சதவீதம் ஆகும் | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | நிலுவை கடை வாடகை அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | சபைக்குரிய 02 நீர் திட்டங்களின் 519 நீர் பாவனையாளர்களிடமிருந்து 2015 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 1,385,503 ஆன நிலுவை கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை | நிலுவை தொகையை எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | நிலுவை நீர்க் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மாகாண சபை பிரதான செயளலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 5,232,127 தொகையும், முத்திரைக் கட்டணம் ரூபா 1,963,765 தொகை பெற்றக் கொள்ள்பபட்டிருக்கவில்லை | தற்போது நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 3,403,877 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் முத்திரைக் கட்டண நிலுவையை பெற்றுக் கொள்வதற்கான வேண்டுகோள் குறித்த அதிகாரிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட போதும் இதுவரை நிலுவைத் தொகைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும், முத்திரைக் கட்டணங்களை பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | சபையினால் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியமைக்காக 2014 முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அறவிடப்பட வேண்டிய ரூபா 2,751,968 ஆன நிலுவை இயந்திர வாடகை வருமானம் 2023 மார்ச் 17 ஆம் தேதி வரை அறியப்பட்டிருக்கவில்லை | இந்நிலுவையை அறவிடுவதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதாக அறிய தருகின்றேன் | நிலுவை இயந்திர வாடகையை விரைவில் நடவடிக்கை எடுத்தல் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (எ) | சபைக்கு உரிய 9 ஆதனங்களிலிருந்து 2022 ஒக்டோபர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 13,115,888 ஆன நிலுவை அறவிப்பட்டிருக்கவில்லை | தற்போது சபைக்கு அறவிட வேண்டிய நிலுவை தொகை ரூபா 303,625 ஆகும் | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

2.3 <u>மிகை அறவீடு</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை- | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகை அறவீடுகளுக்குரிய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 76,608 தொகை அறவிட வேண்டியிருந்தது. | 2023 ஏப்ரல் 28 ஆந் திகதி வரை மேலும் ரூபா 70,608.20 கொடுப்பனவு செய்ய உள்ளது. மாதாந்தம் அறவிடப்படவுள்ளது. | மிகை அறவீட்டினை அறவிட வேண்டும |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொது மக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடிக் காலம் முடிவடைந்திரந்த 06 | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றேன் | அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) 2010 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட தனமல்வில திண்மக் கழிவுப் முகாமைத்துவ நிலையம் ஆரம்பிக்கப்பட்டு 12 ஆண்டுகள் கடந்து இருந்த போதும் சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை மேலும் சேரும் அழிவடையாத கழிவுப் பொருட்களை குழியொன்றில் இடப்பட்டு வந்ததுடன் மீள்சுழற்சி செய்வதற்கு செய்வதற்கு அல்லர் வேறு பொருத்தமான நடவடிக்கையை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ள தேவையான கட்டணங்கள் செலுத்தியுள்ளதாகவும் அழிவடையாத கழிவுப்பொருட்கள் சேறுவதை குறைப்பதற்காக திண்ம கழிவுப்பொருள் நிலையத்தில் போத்தல்களை களஞ்சியப்படத்துவதற்கு இடடொன்று நிர்மாணிக்கப் பட்டுள்ளதாகவும் தயவுடன்அறிய தருகிறேன் | திண்மக் கழிவுப் முகாமைத்துவ நிலையத்தை முறைமைப்படுத்த வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| பிரதேச சபைக்கு சொந்தமான 15 காணிகள் மற்றும் 102 மயானங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் சபையின் நிதி நிலைமையின் பேரில் எஞ்சிய மயானங்கள் மற்றம் காணிகளின் அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | காணி மற்றும் கட்டிடங்களை பெறுமதி துறைசார் மதிப்பீட்டாளர் மூலம் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134 பிரிவின்படி அபிவிருத்தியடைந்த பிரதேசங்களின் அபிவிருத்தி அடைந்த மட்டத்தை இனங்கண்டு கருத்திற்கொண்டு அபிவிருத்தி பிரதேசங்கள் தொடர்பாக வீதவரி பிரகடணப்படுத்தப்பட்டு கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2023 பெப்ரவரி 17 ஆந் திகதிய வர்த்தமானி மூலம் அபிவிருத்தியடைந்த பிரதேசமாக இனங் காணப்பட்டிருந்ததுடன் மதிப்பீட்டிற்காக முறையான கணிப்பீடு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். | அபிவிருத்தியடைந்த பிரதேசங்கள் தொடர்பாக வீதவரி பிரகடனம் செய்யப்பட்டு கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபைக்குரிய 9 வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளாமை காரணமாக தண்டப்பணமாக ரூபா 55,045 மற்றும் மற்றும் கட்டணங்களாக ரூபா 155,600 உம் செலுத்த வேண்டியிருந்தது | வாகனங்களுக்கான வருமான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை விரைவில் கொள்வதாக தயவுடன் அறியத் தருகிறேன் | தாமதமின்றி வருமான அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளல் வேண்டும் |
| (ஆ) சபைக்கு சொந்தமான 5 வாகனங்கள் 2023 மார்ச் 17ஆம் திகதி வரையில் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலையில் காணப்பட்டதுடன் அவ் வாகனங்களை திருத்தம் செய்து பயனபடுத்துவதற்கோ திருத்தம் செய்ய முடியாத வாகனங்களை கைதவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | திருத்தியமைப்பதற்கு அதிக அளவு தொகை பணம் செலவாகுதல் மற்றும் செயற்திறனின்மை ஆகிய காரணங்களின் பேரில் திருத்தம் செய்யப்படாமல் உள்ளதுடன் இயலுமை இருந்தால் எதிர்காலத்தில் வாகனங்களை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் | விளைவற்ற வாகனங்களை திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு அல்லது முறையான அங்கீகாரம் ஒன்றின் கீழ் கை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) தனமல்வில பிரதேச சபை பயன்படுத்தும் 02 வாகனங்களில் உரித்து 2023 மார்ச் 17 ஆம் திகதி வரையில் சபைக்கு கையேற்கப்பட்டு இருக்கவில்லை | உரித்தினை கையேற்பதற்கான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்வதாக தயவுடன் அறியத் தருகிறேன் | சபை பயன்படுத்தும் வாகனங்களின் சட்டரீதியான உரித்தை கையேற்கவேண்டும் |

## 3.5 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்களின் கீழ் ரூபா 1,971,438 செலவிடப்பட்டு திமுது முன்பள்ளி பாடசாலை கட்டிட நிர்மாணத்திற்காக சபையால் 2022 ஜுலை 08 ஆம் திகதி கிராம அபிவருத்தி சங்கம் ஒன்றுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. 2022 ஒக்டோபர் 08 திகதி அளவில் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதும் 2022 நவம்பர் 18 ஆம் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது அதன் வேலைகள் இடைநடுவில் விடப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தக்காரருக்கு பகுதி தொகையாக ரூபா 465,712 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நிர்மாணத்தை முழுமையாக நிறைவேற்றுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன் | குறித்த காலஎல்லைக்குள் நிர்மாணத்தை பூர்த்தி செய்யாமைல தொடர்பில் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பெறுகை வழிகாட்டி கோவையின் 5.4.4(ii) வழிகாட்டலுக்கு இணங்காத வகையில் தனமல்வில பிரதேச சபையால் 03 சந்தர்ப்பங்களில் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கு 1,199,247 தொகை முற்பணமாக வழங்கியிருந்தது எவ்வாறாயினும் ஒப்பந்த சங்கத்தினால் குறித்த நிர்மாணத்தை நிறைவேற்றாமல் இருந்ததுடன் 2023 மார்ச் 17 ஆம் திகதி வரையில் முற்பணமாக வழங்கப்பட்டிருந்த பணத்தை சபையால் அறவிடப்பட்டிருக்கவில்லை | இந்த முற்பணத் தொகையை முறைப்படி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகிறேன். | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பெறுகை வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) சபையால் 2022 மார்ச் மாதத்தில் 02 சந்தர்ப்பங்களின் போது 02 வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 70,000 வீதம் ரூபா 140,000 என முற்பணத் தொகையொன்று அங்கீகரிக்கப்பட்ட சங்கம் ஒன்றுக்கு வழங்கப்பட்டிருந்த போதும் 2023 மார்ச் 17 ஆம் திகதி வரையில் குறித்த வீதி அபிவிருத்தி செய்யப்படாமல் இருந்ததுடன் முற்பணமாக வழங்கிய தொகையையும் சபை அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறித்த வீதிகளில் மேற்கொள்ளப்படுகின்ற வேலைப் பகுதிகள் அடிப்படையில் பட்டியலிடல் மேற்கொள்ளப்பட்டு வழங்கப்பட்ட முற்பணத்தை அறவிடுவதற்கும் ஏதேனும் குறை ஒன்று இருந்தால் வேறாக குறித்த சங்கத்தின் இடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிய தருகிறேன். | உரிய கால எல்லைக்குள் நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பெறுகை வழிகாட்டி கோவையின் 5.4.4(ii) வழிகாட்டலுக்கு இணங்காத வகையில தனமல்வில பிரதேச சபையால் 12 சந்தர்ப்பங்களின் போது நிர்மான வேலைகளை நிறைவேற்றுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட சங்கம் ஒன்றுக்கு ரூபா 2,280,992 ஆன முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன | அறியாமை அடிப்படையில் முன்னைய ஆண்டுகளில் இருந்து நிர்மாணங்களுக்காக முற்பணங்கள் வழங்கப் பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் குடியரசின் பெறுகை வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் 04 பதவிகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் 10 | காணப்படும் வெற்றிடங்களை தொடர்பாக ஒவ்வொரு மாதமும் குறித்த அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டு வருகின்றது. | பதவியணி வெற்றிடங்களை நிரப்பவுதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஊழியர்கள் பற்றாக்குறை யொன்று காணப்படுவதுடன் 2023 மார்ச் 17 ஆந் திகதி வரை அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| **(ஆ)** | பிரதேச சபையில் சேவை புரியும் நாளாந்த சம்பள பெறும் ஊழியர்களுக்காக 2015 ஒக்டோபர் முதல் 2022 ஒக்தோபர் வரையான காலப்பகுதிக்குரிய செலுத்த வேண்டிய ரூபா 1,103,087 ஆன பங்களிப்புத் தொகை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகையையும் மிகை அறவீட்டுக் கொடுப்பனவு செய்வதற்கு உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் தவணையாக கொடுப்பனவு செய்வதற்காக முகாமைத்துவ குழுவின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது அங்கீகாரம் கிடைத்த பின்னர் இந்நிலுவைத் தொகையை தவணை அடிப்படையில் கொடுப்பினவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். | ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் உரிய கொடுப்பனவுகளை உரிய காலத்தில் செலுத்தப்பட வேண்டும் |

## 4. <u>கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்</u>

### 4.1 <u>பாதீட்டுக் கட்டுப்பாடு</u>

| **<u>கணக்காய்வு அவதானிப்பு</u>** | **<u>சபையின் கருத்துரை</u>** | **<u>பரிந்துரை</u>** |
|---|---|---|
| மீளாய்வான்டில் பிரதேச சபையால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் ஆண்டின் உள்ளவாறான வருமானங்களுக்கு இடையே 3 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலும் மதிப்பிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையே 2 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப் பட்டதால் வருமான செலவின கட்டுப்பாட்டில் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | நாட்டில் காணப்பட்ட கோவிட் நிலைமை மற்றும் நாட்டில் காணப்பட்ட பாதகமான அரசியல் நிலைமை காரணமாக இவ்வாறான நிலைமை ஏற்பட்டதுடன் 2023 ஆம் ஆண்டின் போது விலகல்களை குறைக்கும் வகையில் பாதீட்டைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பபேன் | சரியாக பாதிரி தயாரிக்கப்பட்டு அதில் இலக்கு நிறைவேற்றப்படவே ண்டும் தேவைப்பாட்டினை கருத்திற் கொண்டு கவனமாக நடவடிக்கை எடுத்து பாதீடு தயாரிக்கப்பட வேண்டும் |